BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
An international open access, peer- reviewed, refereed journal

தமிழ்மொழி: பித்தும் தெளிவும் - ஓர் அயலக நோக்கு

முனைவர் ஏ. பிரேமானந்த்
புதுச்சேரி
மின்னஞ்சல்: epremanand87@gmail.com
கைப்பேசி: 9717768782, 9434288492

ஆய்வுச் சுருக்கம்

உலகில் தோன்றிய மொழிகள் பல. அம் மொழிகளில் சீரோடும் சிறப்போடும் விளங்குவது நம் தாய்மொழி தமிழே. பல்வேறு காலச் சூழல்களுக்கேற்ப மொழிகள் மறைவதும் மாற்றம் பெறுவதும் உண்டு. இச் சூழலில் தமிழ்நாட்டில் வழக்கிலிருந்த தமிழ்மொழி உலக நாடுகள் முழுவதும் கிளைத்திருப்பது தமிழ்மொழிக்கே கிடைத்த பெரும்பேறு. பல்வேறு காரணங்களால் தமிழர்கள் உலக நாடுகள் முழுக்கச் சுற்றி வருகின்றனர்; வசித்தும் வருகின்றனர்; தங்களுடைய வாழ்வியலையும் அமைத்துக் கொள்கின்றனர். இதனால் 'தமிழ்க் கலாச்சாரம்', 'தமிழ்ப் பண்பாடு'உலக நாடு முழுவதும் கலக்கின்றது. மற்ற மொழிகளிலிருந்து தமிழ்மொழி எவ்வாறு தனித்துவம் பெற்றுத் திகழுகின்றது; தமிழ்மொழி உலக நாடுகளில் எவ்வாறு மதிப்புறு பெற்றிருக்கிறது;கல்வி நிலையங்களிலும் கல்விச் சாராத நிலையங்களிலும் தமிழ்மொழியின் முக்கியத்துவம் எவ்வாறு வெளிப்பட்டிருக்கின்றது என்பது குறித்து ***தமிழ்மொழி: பித்தும் தெளிவும் - ஓர் அயலக நோக்கு*** எனும் தலைப்பில் ஆராய்கிறது இக் கட்டுரை.

குறிச் சொற்கள்

தாய்மொழி - தமிழ்மொழி – பித்தும் – தெளிவும் – தமிழரும் – நிகண்டு – அகராதி – மலேசியா – சிங்கப்பூர் - மானிடம் – இலக்கியம் – இலக்கணம் – ஐரோப்பியர் வருகை – வீரமாமுனிவர் – ஜி.யு. போப் – இலங்கை – பல்கலைக்கழகம் –வெளி-மொழி – வெளி-பண்பாடு –வரலாறு – பண்பலை – தொலைக்காட்சி – திரைப்படம் – ஊடகம் – பத்திரிகைகள்.

I

உலகில் தோன்றிய தமிழும் தமிழரும் முதலும் முடிவுமாக விளங்குவர். எனினும், பிறர் நாட்டினரின் வருகையால் தமிழினத்தின் போக்கும் வாழ்வும் கேள்விக்குரியதாகின. அதனால், அம் மொழிவழிப் பல்வேறு இடர்பாடுகளைத் தமிழும் தமிழர்களும் அனுபவித்தனர்; அனுபவித்தும் வருகின்றனர். என்றாலும் உலகரங்கில் தமிழர்களுக்கென்றுத் தனித்த இடம் உண்டு. அச் சிறப்பிற்குக் காரணம் தாய்மொழியாகியதமிழ்மொழியே. பல்வேறு மொழியினரோடு போட்டியிட்டு தனித்த இடத்தைப் பெறும் தமிழ்மொழிக் குறித்த சுருக்கமும் அதன் பின்புலமும், இலக்கண–இலக்கிய–வேதாந்த-சித்தாந்த சிந்தனைகளோடு அலசுவதும், இனம்xதமிழினம், பண்பாடுxநாகரிகம், கலைxகலாச்சாரம், கொள்கைxகோட்பாடு, ஆண்xபெண், மொழிxகுடும்பம், சமூகம்xசமுதாயம், அரசியல்xஅரசாங்கம், சமயம்xகல்வி முதலியவற்றைக் குறிப்பிடுவதும், மனம்xமானம், உணர்வுxஉணர்ச்சி, உயிர்xஉடமை, உயர்வுxதாழ்வு முதலான மானிட இயல்பூக்க நிலைக்களங்களையும் குறிப்பிட ஏதுவாக இக் கட்டுரை,**"தமிழ்மொழி: பித்தும் தெளிவும் - ஓர் அயலக நோக்கு"**என்கிற தலைப்பின் கீழ் அமைகிறது.

உலகிலுள்ள அத்துணை உயிரினங்களுக்கும் மொழியுண்டு. அது உயிரினவகையேற்ப மாறுபடும்; வகைப்படும். பகுத்தறிவுடைய மானிடர்களுக்கு மொழியே பிரதானம். சுவை மட்டுமே அறியபடைக்கப்பட்ட நாவிற்கு, மொழியின் சுவையையும் புசிக்க முடியுமென்பதை, ஆணித்தரமாக நம்பியது பகுத்தறிவினம். அதன்பொருட்டு சைகை மொழிக்கும்–

உடலசைவு மொழிக்கும், ஒலி/ஒளியென எழுப்புமொழிக்கும் விடுதலை அளித்துள்ளது நாவிசை மொழிகள். எல்லா மொழிகளுக்குள்ளும் உயிர் இருக்கிறது; எல்லா உயிர்க்குள்ளும் மொழியொன்று இருக்கிறது. அதைத்தான் தாய்மொழியென்று பலராலும் அறிவுறுத்தப்படுகிறது. அவ் வகையில், உலகில் தோன்றிய மொழிகளிலேயே மிகவும் வளம்+பழமை வாய்ந்த மொழியாகக் கருதப்படும் ஒரே செம்மொழி தமிழ்மொழியே.

II

உலகின் தொன்மை மொழிகள்6.அவை 'தமிழ்', 'சமஸ்கிருதம்', 'சீனம்', 'இலத்தீன்', 'கிரேக்கம்', 'இப்ரூ'ஆகியவை. இவற்றில் 'சமஸ்கிருதம்' பேச்சுமொழி அல்ல. 'இலத்தீன்', 'இப்ரூ' மொழிகள் வழக்கொழிந்துவிட்டன. ஆனால், தேவநேயப்பாவாணர் கூறியதுபோல்– "இன்றும் இலக்கியச் செம்மை, இலக்கண வரம்பு, பழைமை, நிறைந்த சொல்வளம், மிக்கு என்றும் கன்னியாக விளங்குவது தமிழ்மொழியே" விளங்குகிறதுஎன்கிறாரவர். இன்று நாட்டுக்கு நாடு மொழிகள் வேறுபட்டு ஏறக்குறைய (6800)ஆறாயிரத்து எண்ணூறுக்கு மேற்பட்ட மொழிகள் வழக்கில் இருக்கின்றன. இவற்றில் (2300)இரண்டாயிரத்து முன்னூறு மொழிகள் மட்டுமே எழுத்துருவில் இருக்கின்றன. அதிகமான மக்களால் தாய்மொழியாகக் கருதப்பட்டும் பேசப்பட்டும் எழுதப்பட்டும் கொண்டிருக்கும் மொழிகள் 'ஆங்கிலம்', 'இந்தி', 'சீனம்', 'தமிழ்'ஆகும். இதில், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும்மேலாக அன்றும் இன்றும் செழுமையுடன் இருக்கக்கூடிய ஒரே மொழி தமிழ்மொழி மட்டுமே.

தமிழ்மொழி வரலாறு+தமிழ் இலக்கண வரலாறு+தமிழ் இலக்கிய வரலாறு+தமிழர் இலக்கண வரலாறுமுதலியவை தமிழினத்திற்கென்றே உருவான கருத்துருவாக்கங்களாகும். இந் நிலைபாடு எந்தயொரு மொழியிலும் இல்லை. அந்தளவிற்குக்கொடுந்தமிழ்-செந்தமிழ் எனும்பிரிவு நிலைக்களனாகஅன்றிலிருந்து இன்றுவரை மானிடச் செவியறிவுக்கும்எழுத்தறிவுக்கும் பாலமாக அமையும் மொழிதமிழ்மொழியே. அதனூடாக, இயல்+இசை=நாடகம் என்கிற முத்தமிழைக் கொண்டியங்கும் உயிருள்ள மொழியும் தமிழ்மொழியே. எழுத்து–கலை–ஓவியம்–பத்திரிகை–தொலைக்காட்சி–கணினிமுதலான ஊடகங்கள்; கல்வெட்டுகள்–புதைப்பொருள்கள்–செப்புப்பட்டையங்கள் முதலான அகழ்வாய்வுகள்;பண்டையத் தமிழர்தம் வாணிபம்–நாணயங்கள்–பாறை ஓவியங்கள்–வெளிநாட்டினரின் வரலாற்றுக்குறிப்புகள்–நூல்கள்–அகராதிகள்–நிகண்டுகள் ஊடாகத் தமிழினத்தின் ஆவணங்களைத் தமிழ்மொழிவழித்தமிழினத்தையும், தமிழினத்தின்வழித்தமிழ்மொழியின் வாழ்வியலையும்அறியமுடிகின்றது.

III

அகத்தியம் தொடங்கி, தொல்காப்பியம் வரை தமிழ்ச் சான்றோர்- தமிழுக்கும் தமிழினத்திற்கும் முக்கியப் பங்காற்றினர். அதன்பேரில், தமிழ்மொழி வெறும் மொழியுக்தியாகப் பாவிக்காமல் வாழ்வாக/வாழ்க்கைஇலக்கியமாகப் பாவித்ததனால்இன்றும் மொழிவரலாற்றிலும் இலக்கியவரலாற்றிலும் மானிடநெறிவரலாற்றிலும் முக்கிய இடத்திலிருக்கின்றது. பள்ளிக் கல்வி+ பல்கலைக்கழக கல்வி நிறுவனங்களில் முதன்மைப்பாடமாகத் தமிழ்மொழி சிறப்புப் பெற்று வருகின்றது. இந் நிலை தமிழ்நாட்டில் மட்டுமன்று; வடநாட்டிலும், மத்திய–மாநில கல்விக் கூடங்களிலும் தமிழ்மொழியை ஓர் ஆவணப்பாடமாகவும், தமிழினத்தின் பண்பாட்டுக் கூறாகவும் பார்க்கும் மனப்பாங்கு இனம், மொழி கடந்த மனிதர்களால் உணரப்படுமளவிற்கு விழிப்புணர்ச்சிக் கண்டுள்ளது. மானிட உறவுபாலமென்பது வெகு நீண்டது; அது இனம்–சமூகம்–அரசியல்–பண்பாடு–நாகரிகம்–சாதி–சமயம்–கல்வி–இலக்கணம்–இலக்கியம்ஆகிய பதங்களைக் கடந்தது. இருப்பினும், இவையனைத்தையும் ஒன்றுசேர்ப்பது மொழியெனும் கருவியே. ஆகவே, தமிழ்மொழியைத் தூக்கி நிறுத்தியவர்கள்பலரின் இவர்களென்று சான்று பகர்க்கலாம்.

- கி.மு (3) மூன்றாம் நூற்றாண்டுத் தொட்டு, வடக்கில் இருந்து வந்த சமண, பௌத்த, இந்து சனாதன மதங்கள்கூட முறையே தத்தமது மதங்களைத் தமிழிலேயே பரப்பினர். சமணர்கள் ஒருபடிஉயர்ந்துபல இலக்கியங்கள்+இலக்கணங்கள்+காப்பியங்கள் தமிழில் உருவாக்கினர்; ஒவ்வொரு ஊர்களிலும் பள்ளிகளை நிறுவினர்; சமண மதத்தோடு தமிழ்மொழியைக் கற்றுக் கொடுத்தனர். தமிழ் இன்றளவும் வாழும் மொழியாக இருப்பதற்கு அவர்கள்தம்பங்களிப்பு அதிகம்.
- கி.பி.(7) ஏழாம் நூற்றாண்டளவில் எழுந்த பார்ப்பனீயம், மதம்சார்ந்த பக்தி எழுச்சிக் காலங்களில்கூட தமிழ் மொழியிலேயே இந்து மதத்தைப் பரப்பினர். பல சமஸ்கிருத நூல்கள் தமிழகத்தில் எழுதப்பட்டு ஆளுமை செலுத்தியபோதும் தமிழ்க்கல்வி தடை பெறவில்லை; அதுவாழும் மொழியாகவே இருந்துள்ளது; இருந்தும் வருகின்றது என்பது தெளிவு.

- தமிழ்மொழி மற்றும் பண்பாட்டுத் தளத்தில் ஐரோப்பியர் மற்றும் அமெரிக்கர் உருவாக்கிய தாக்கங்கள், விளைவுகள் ஏராளம். குறிப்பாக, ஐரோப்பியரின் வருகை கிறித்தவ, இஸ்லாமிய மதமாற்றத்தின்போதும்கூட, தமிழ்மொழி வளர்ச்சி கண்டது. இஸ்லாமிய சமயத்தைத் தழுவிய தமிழ்க்குடிகளான 'முக்குவர்', 'மீனவர்', 'மரக்கலத்தார்'கள்கூட தமது தாய்மொழியை விட்டுக் கொடுக்கவில்லை. இதேபோல், பல ஐரோப்பிய பாதிரிமார்கள் தமிழகம் வந்து தமிழ்க்கற்று மதமாற்றப் பணிகளில் ஈடுபட்டனர் என்கிற குறிப்பும் தமிழ்மொழி வரலாறு கூறுகின்றது. அதிலும் பலர் தமிழ்மொழியின் வளர்ச்சியில் பெரும்பங்காற்றியுள்ளனர்.
- 'அண்ட்ரிக் அடிகளார்'(1520-1600), 'இராபர்ட்-டி-நோபிலி'(1577-1655),' வீரமாமுனிவர்'(1680-1746), 'பார்த்தலோமியோ சீகன்பால்கு'(1682-1719),'ஜோகன் பிலிப் பெப்ரீசியஸ்' (1711-1791),'கிறிஸ்தியான் பிரெடரிக் சுவார்ட்ஸ்' (1726-1798),'ஜே.பி. இராட்லர்'(1749-1836), 'கர்னல் காலின் மெக்கன்சி' (1754-1821), 'பிரான்சிஸ் வைட் எல்லீஸ்'(1777-1819),'சார்லஸ் இ கோவர்' (1777-1835),'மீரான் வின்சுலோ'(1789-1864),'சார்லஸ் தியாப்பிலஸ் ஈவால்ட் இரேனியஸ்'(1790-1838),'லெவி ஸ்பவுல்டிங்'(1791-1874),'வில்லியம் டெய்லர்'(1796-1878),'பீட்டர் பெர்சிவல்'(1803-1872),'ஹென்றி பவர்'(1812-1885), 'அலெக்சாண்டர் கன்னிங்காம்' (1814-1893),'ஜான் மர்டாக்'(1819-1904),'ஜார்ஜ் உக்லோவ்போப்'(1820-1908), 'பர்ட் கால்டுவெல்'(1838-1891), 'எட்கர் தர்ஸ்டன்' (1855-1935), 'ஜான் மார்ஷல்' (1876-1934), 'கமில்சுவலெபில்' (1927-2009), 'பிரான்சுவா குரோ' (1933-2021), 'ஜார்ஜ் எல். ஹார்ட்' (1945)ஆகியோர் தமிழ் இலக்கிய – இலக்கண – மொழிபெயர்ப்பு – இயக்கச் செயல்கள் – நூல்தொகுப்பு – அகராதிகள் – கண்டுபிடிப்புகள் எனப் பல்வேறு வழியில்தங்களுடைய தமிழ்ப்பற்றைத் தமிழுக்கும் தமிழருக்கும் அணிசேர்த்துள்ள வெளிநாட்டுத் தமிழ்ச் சான்றோராவர்.

  தமிழ்மொழியை–தமிழ் இலக்கணத்தை–தமிழ் இலக்கியத்தைத் தமிழர்கள் உணர்ந்தனர் என்பதை, தமிழ்மொழி வரலாற்றுச் சான்றோர்கள் குறிப்பிடுவர். அதேவேளையில், வேற்று இனத்தாரும்வேற்று நாட்டினரும் தென்னாட்டிற்கு வந்து, தமிழுக்காகப்பல அரிய தமிழ்ப்பணியைச் செய்துள்ளனர் என்பதைமேற்சுட்டிய சான்றுகள் விளக்கும்.

IV

தமிழ்மொழி அகிலத்தின் பல பாகங்களில் ஆட்சிமொழியாகக் கோலோச்சியிந்தது; தென்னிந்தியாவில் மட்டுமின்றி 'கங்கம்', 'கலிங்கம்', 'வங்காளம்', 'இலங்கை', 'மலேசியா', 'மாலை தீவுகள்' ஆகிய நாடுகளில் ஆட்சிமொழியாக ஒரு காலத்தில் இருந்தது.

கடந்த (200) இருநூறு ஆண்டுகளுக்கு முன்புவரை ஆயிரக்கணக்கான வருடங்கள் தமிழகத்தின் ஆட்சிமொழியாகத் தமிழ்மொழி இருந்திருக்கிறது. சிங்கப்பூரில் தமிழ் ஆட்சிமொழியாகவும், அங்குள்ள பள்ளிகளில் கற்கும் மொழியாகவும் தற்போதும் இருந்து வருகிறது. 1100 ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது, கி.பி. 9-ஆம் நூற்றாண்டுவரை கன்னடமொழி தமிழாகவே இருந்தது; கன்னடர்கள் தமிழர்களாகவே இருந்தனர். 900 ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது, கி.பி. 11-ஆம் நூற்றாண்டுவரை தெலுங்குமொழி தமிழாகவே இருந்தது; தெலுங்கர்கள் தமிழர்களாகவே இருந்தனர். 700 ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது, 13-ஆம் நூற்றாண்டவரை மலையாளம் தமிழாகவே இருந்தது; மலையாளிகள் என்றோர் இனமில்லை; எல்லோரும் தமிழர்களாகவே இருந்தனர். இன்றைக்குத் தமிழ்நாட்டில் வாழுகின்ற தமிழ் மக்கட்தொகை 6 கோடி. கன்னடமொழிப் பேசுவோர் 4 கோடி. தெலுங்குமொழிப் பேசுவோர் 9 கோடி. மளையாளமொழிப் பேசுவோர் 2 கோடி. கன்னடமும் தெலுங்கும் மலையாளமும் தமிழிலிருந்து தோன்றாமல் இருந்திருதால், இன்றைக்கு இந்தியாவிலே இருந்திருக்கக்கூடிய தமிழினத்தின் தொகை 21 கோடியே.

இன்று ஏறக்குறைய 77மில்லியன் தமிழர்கள் உலகநாடுகள் எல்லாவற்றிலும் புலம்பெயர்ந்து வாழுகின்றனர். தமிழகத்தில் இருந்து புலம்பெயர்ந்து 'இலங்கை', 'மலேசியா', 'சிங்கப்பூர்'ஆகிய நாடுகளில் தமிழர்கள் குடியேறியபோது, தமிழ்மொழி அந்தந்த நாடுகளில் நிலைப்பெற்றிருந்தது. மொரீசியஸ் நாட்டில் தமிழர்கள் இருந்தனர். தென்னாப்பிரிக்காவில்இன்றையக் கணக்குப்படி ($6^{1/2}$) ஆறரை இலட்சம் தமிழ் மக்கள் வாழ்கின்றனர். சில ஆயிரம் மூத்த குடிமக்கள் மட்டும் தமிழ் பேசக்கூடியவர்களாக இருக்கின்றனர்.

இங்கிலாந்தில் வாழப்போகின்ற நம் எதிர்காலச் சந்ததிகளின் தமிழுக்கும், 'சுவிச்சர்லாந்து', 'கனடா', 'நார்வே','ஜெர்மனி', 'ஆஸ்திரேலியா', 'அமெரிக்கா' ஆகிய நாடுகளில் வழங்கப்போகின்ற தமிழுக்கும் இடையே வேறுபாடு உண்டு. ஆகவே, அந்தந்த நாடுகளிலே வழங்குகின்ற மொழிகளின் சாயலில் பல்வேறு வடிவங்களில்தான் தமிழ்மொழி வாழப்போகின்றது என்பது நிதர்சனமான உண்மை.

தென்னிந்திய மாநிலமான தமிழ்நாட்டின் பெரும்பான்மையினரதும், இலங்கையின் வடக்கு கிழக்குப்பகுதிகளில் வாழும் மக்களதும் முதன்மை மொழி தமிழே. தமிழ் மேற்படி நாடுகளின் பிற பகுதிகளிலும் குறிப்பாக, இந்திய மாநிலங்களான'கர்நாடகம்', 'கேரளம்', 'மகாராஷ்டிர'த்திலும், இலங்கையில், 'கொழும்பு'மற்றும் மத்திய மலைநாட்டுப்பகுதிகளிலும் வழங்கிவருகின்றது. மிக அண்மைக்காலங்களில், பெரும்பாலும் இலங்கையின் இனமுரண்பாடுகள் காரணமாக அகதிகளாக அங்கிருந்து இடம்பெயர்ந்தவர்களும், ஓரளவு பொருளாதாரக் காரணங்களுக்காக இடம்பெயர்ந்தவர்களுமாக, பலத் தமிழர்கள் 'ஆஸ்திரேலியா', 'நியூசிலாந்து', 'கனடா', 'ஐக்கிய அமெரிக்கா' மற்றும் பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.

V

தமிழ், இந்திய மாநிலமான தமிழ்நாட்டின் ஆட்சிமொழியாக உள்ளது; இந்திய அரசியலமைப்பின்கீழ் தேசியமொழிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ள 22மொழிகளுள் ஒன்றாகவும் உள்ளது. இலங்கையிலும் தமிழ் மூன்று ஆட்சிமொழிகளுள் ஒன்றாக அங்கீகாரம் பெற்றுள்ளது; சிங்கப்பூர் நாட்டிலும் தேசியமொழிகளுள் ஒன்றாகத் தமிழ் இடம்பெற்றிருக்கிறது. தென்னாப்பிரிக்காவிலும் தமிழுக்கு அரசியலமைப்பு அங்கீகாரம் உள்ளது. அத்துடன், இந்தியாவிலும் வெளிநாடுகளிலுமுள்ள பல தமிழ் அமைப்புகளினதும்அறிஞர்களினதும் குறிப்பாக, பர்க்லேயிலுள்ள கலிபோர்னியாப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவரான 'ஜார்ஜ் எல் ஹார்ட்'ஆகியோரின் முயற்சிகளைத் தொடர்ந்து 2004-ஆம் ஆண்டில், இந்திய அரசினால் தமிழ் ஒரு 'செம்மொழி'யாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.இவ்வாறு அங்கீகாரம் பெற்றுள்ள முதல் இந்தியமொழி தமிழாகும். இந்திய நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் கூட்டமொன்றின்போது, 2004 ஜூன் 6-ஆம் நாள் இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் 'அப்துல் கலாம்'அவர்களால், இவ்வறிவிப்பு வெளியிடப்பட்டது.

இந்தியஅரசு, தமிழ்மொழியைச் செவ்வியல் மொழியாக 2004-ஆம் ஆண்டு அறிவித்தது; அவ்வறிவிப்புக்கு முன்னரே உலகநாடுகளில் தமிழின் தொன்மை உணரப்பட்டது. உலகநாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்கள் பலவற்றிலும் தமிழ்த்துறைகள் நிறுவப்பட்டன. மொழியைக் கற்பதற்கு ஆர்வம்கொண்ட பிற நாட்டு மாணவர்களும் தமிழை ஆர்வமுடன் கற்று வருகின்றனர். உலக அளவில் தமிழ் கற்கப்பட்டு வருவதற்கு நாடுகள் பலவற்றிலுள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ்த்துறைகளும் இருக்கைகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. சான்றாக:

- 'தமிழ்நாடு', 'புதுச்சேரி', 'இலங்கை', 'மலேசியா', 'சிங்கப்பூர்', 'அந்தமான் தீவுக'ளில் தமிழ் உத்தியோக மொழியாகப் பாவிக்கப்படுகிறது.
- இந்தோனேஷியா பல்கலைக்கழகத்தில் இந்தியத்துறையில் தமிழ்மொழி கற்பிக்கப்படுகிறது.
- யுட்ரெட் மாநிலப் பல்கலைக்கழகத்தில் இந்தியவியல்துறை தமிழ்ப்பிரிவினைக் கொண்டுள்ளது.
- இலெய்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை நிறுவப்பட்டுள்ளது.
- யூஃட்ரெஹ்ட் பல்கலைக்கழகத்திலுள்ள துறைகளுள் தமிழ் கற்பிக்கப்படும் துறையும் ஒன்று. செக் நாட்டைச் சேர்ந்த திராவிடமொழி பேராசிரியர் கடந்த 2007 வரை அப்பல்கலைக்கழகத்தில் தமிழ் கற்பித்தார்.
- செக் நாடு பிராகில் உள்ள கீழ்திசை இந்தோனேஷியா பல்கலைக்கழகத்தில் இந்தியத்துறையில் தமிழ்மொழி கற்பிக்கப்படுகிறது.டாக்டர்கமில் சுவலபில் அங்குப் பேராசிரியராகப் பணியாற்றியபோது, தமிழ் இலக்கியங்களை மொழிபெயர்த்துள்ளார்.
- திராவிட மொழிகளில் ஆர்வமுள்ள டாக்டர் வாசெக் சார்லஸ் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் படிப்புகளை ஊக்குவித்து வருகிறார்.
- டென்மார்க்கில் உள்ள ஸ்கேண்டினேவியன் ஆசிய நிறுவனத்தில் தமிழ் ஆராய்ச்சிகள் இன்றும் நடந்து வருகின்றன.
- ஆப்பிரிக்காவிலுள்ள டர்பன் பல்கலைக்கழகத்தில் இந்தியவியலுக்கென தனித்துறை உள்ளது; அங்குத் தமிழுக்கென தனிப்பிரிவும் இயங்குகிறது.
- மியான்மர் நாட்டின் இரங்கூனில் உள்ள தாகூர் கல்லூரியில் தமிழ் கற்பிக்கப்படுகிறது.

- போலந்து நாட்டிலுள்ள வார்சா பல்கலைக்கழகத்தில் தமிழ் கற்பிக்கப்படுகிறது.
- 'பிரான்சு', 'ஜெர்மனி','ரஷ்யா', 'இங்கிலாந்து' என ஐரோப்பிய நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ், முதுகலை அளவில் கற்பிக்கப்படுகிறது.
- 'அமெரிக்கா','கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் ஈழ மாணவர்களும், அமெரிக்க மாணவர்களும் முதுகலைத் தமிழ் கற்று வருகின்றனர்.இந்திய அரசு, தமிழ்மொழியைச் செம்மொழி என அறிவிப்பதற்கான ஆக்கக் கருத்துரைகளை வழங்கிய அமெரிக்க நாட்டைச் சேர்ந்த ஜியார்ஜ் ஹார்ட் இங்குத் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றுகிறார்.
- அமெரிக்காவிலுள்ள வாஷிங்டன், சிக்காக்கோ, பென்சில்வேனியா முதலிய பல்கலைக்கழகங்களிலும் தமிழ் கற்பிக்கப்படுகிறது.
- ருஷ்யத் தலைநகரான மாஸ்கோவிலுள்ள வானொலி நிலையத்தில் தமிழுக்கென தனியாக ஒரு துறை இருந்து வருகிறது. இந்தியத் தமிழரோடு மட்டுமின்றி, உலகநாடுகளிலுள்ள தமிழரோடெல்லாம் தொடர்பு கொள்ளவும் மாஸ்கோ வானொலி நிலையத்திலுள்ள தமிழ்த்துறை பயன்பட்டு வருகிறது. இந்திய பெருநாடு விடுதலை பெற்ற பின்னர்தான் ருஷ்ய வானொலி நிலையத்தில் தமிழுக்குத் தனித்துறை கிடைத்திருக்கிறது.
- இந்தியா விடுதலை பெற்ற பின்னர்தான் அமெரிக்க வானொலியான வாய்ஸ் ஆஃப் அமெரிக்காவிலும் தமிழுக்குத் தனி இடம் தரப்பட்டது.
- லண்டனிலுள்ள பிரிட்டிஷ் வானொலி (பி.பி.ஸி.) நிலையத்தில் மிகவும் சக்தி வாய்ந்த அமைப்பாக தமிழ்த்துறை இயங்கி வருகிறது.

இக் கட்டுரைமுன்னுரையில் குறிப்பிட்ட கருத்துருவாக்கத்தின் அடிப்படையில், மேற்சொன்ன தகவல்கள்–விவரணைகள்–கருத்துச்செறிவுகள்–வரலாறுகள்முதலியவற்றில் இடம்பெற்ற தமிழ்மொழிக் குறித்தும், தமிழர்களின் வாழ்வியல் குறித்தும் பேசிய முக்கியத்துவங்களை இங்குத் தேவைக்கேற்ப அலசி பார்த்தோம். இதனோடு, ஆதிக்கமொழிகளின் குறிப்பையும், அவற்றின் ஆதிக்கத்தையும், நுனிபுல்போல் மேயாமல், உள்ளார்ந்த அரசியல்–ஒற்றுமை, வேற்றுமை-பிரிவினைவாதம் ஆகிய காரண-கருத்தாக்கங்களை அடுத்தடுத்தபகுதிகளில் இடம்பெறுவதைக்காணலாம்.

VI

தற்போது உலகமொழிகளான 'ஆங்கிலம்', 'பிரெஞ்சு', 'ஜெர்மன்', 'ரஷ்யன்' ஆகியவை தனி மொழிகளாகத் தோற்றம் பெறாத காலத்தில் செம்மொழியாக விளங்கியது தமிழ்மொழி. அம் மொழிப் படைத்த 'சங்க இலக்கியங்கள்' இன்னும் நம்மொழிக்கு உயிர்மூச்சாக வாழவைத்துக் கொண்டிருக்கிறது. எனினும், உலகரங்கில் இடம்பெறமுடியவில்லை ஏன்? என்கிற வினா தமிழும் தமிழரும் விடயம் காணவேண்டியத் தேவையிருக்கிறது. வெளிப்படையாகக் கூறினால் காரணம் மொழி மீது குற்றமில்லை; தமிழர்கள் மீதுதான் குற்றம். அவர்களே இத்தகு நிலைக்கு முழுமுதற் காரணமாகத் திகழுகின்றனர். இக் குற்றம் ஏதோ இன்று முளைத்தது அன்று; தமிழ்மொழித் தோன்றியபோதே அதிகப்படியாகத் தமிழர்கள் இக் குற்றங்கள் மனதில் மறைந்தே போயின. சான்றாகச் சிலவற்றைக் கூறலாம். அவை:

- ✓ தமிழ்மொழிக்கென்று முழுமுதற் மூலவரலாறு சரிவர இல்லாமல் போனது.
- ✓ இலக்கண–இலக்கியங்களில் பல்வேறு அரசியல் உட்பூசல்கள் இடம்பெற்றமை.
- ✓ உரையாசிரியர்களின் மூலத் திரிபும் கருத்துத்திரிபும் தமிழ்மொழி வரலாற்றில் மயக்கம் ஏற்படுத்திய நிலைப்பாடு.
- ✓ சாதிய–சமய–சமூகரீதியான மொழி, இலக்கிய–இலக்கண உண்மைகளை மறைத்தலும் புகுத்தலும் முக்கியக் காரணங்களாக அமைந்தன.
- ✓ ஆரம்ப காலத்தில் இருந்தே தமிழர்களிடத்தில் ஒற்றுமை இல்லாமை; அதனால், மொழி மீதும்தமிழுணர்வு மீதும் தார்மீகக் காழ்ப்புணர்ச்சிகள் ஏற்பட்டன.
- ✓ பல்வேறு வெளி-மொழி, வெளி-பண்பாடு, வெளி-கலாச்சாரம், வெளி-திருமணம், வெள்-உணவுஆகியவை தமிழ்மொழியில் கலப்பதைப்போல் தமிழரிடத்திலும் கலந்ததால் ஏற்பட்ட விபரீதம்.

மேற்சொன்ன காரணங்களால் தான் தமிழ்மொழி உலகத் தரத்திற்குச் செல்ல தடையெனக்கருதலாம். ஒரு மொழி அதன் தாயகத்தில் வாழ வழியற்றுப்போனால் வேறு எங்கும் நிலைத்திருக்க வாய்ப்பில்லை. குறிப்பாக, உலகம் முழுவதும் பேசப்பட்டு வரும் அனைத்து மொழிகளுக்கும் ஒரு குறிப்பிட்ட நிலப்பிரதேசம் தாயகப்பகுதியாக இருந்திருக்கின்றது. அம் மொழித் தோன்றி, பரிணமித்து வளர்ச்சிபெற்றிடமாக இருக்கிறது. மேலும், ஒரு மொழி நிலைத்திருக்க அதனைப்

பேசக்கூடிய மக்கள் மிகமிக அவசியம். அம் மக்கள் குழுமி வாழ ஏதுவான தாய்நிலம் தேவை. அதோடு அம் மொழிப் பேசும் மக்களின் அரசியலும் பொருளாதார ஆதிக்கமும் சமூக வளர்ச்சியும் இன்றியமையாதவை.

வரலாற்றை வாசிப்போமானால் பல மொழிகள் காலப்போக்கில் சிதைந்தும் உருமாறியும் அழிந்தும் போயுள்ளன; சில மொழிகள் இன்றளவும் நிலைத்தும் வருகின்றன. பண்டைய பண்பாடுகளை உருவாக்கிய *எகிப்து, சுமேரிய, ரோம மொழிகள்* அனைத்தும் அந்தந்தத் தாய்நிலத்தின் அரசியல் நிர்மூலமாக்கப்பட்ட பின் அழிந்துபோய்விட்டன.பேரரசின் மொழிகளாக, மக்களின் மொழிகளாக, பண்டைய இந்தியாவின் 'பிராகிருதமொழி' இன்று வழக்கில் கிடையாது. அது சிதைந்து 'மராத்தியம்', 'சிங்களம்', 'இந்தி', 'மயிதிலி', 'வங்காளம்'என உருமாறி புதியமொழிகள் பல பிறந்துவிட்டன. மிகப்பழமையான வளர்ச்சி வரலாற்றைக் கொண்ட தமிழ்மொழிக்கூட இடைக்காலத்தில் ஏற்பட்ட அரசியல் பொருளாதார தாக்கத்தினால் தமிழகத்தின் மேற்கு கரைப்பக்கம் மலையாளமாக உருமாறி தனித்த மொழியாக மாற்றம் அடைந்துவிட்டது. ஏனையப் பகுதிகளில் மட்டும் தமிழாக இன்றளவும் நிலைத்து நிற்கிறது. அதுபோக, 'தென்னாப்பிரிக்கா', 'மொரீசியஸ்', 'றியூனியன்', 'பிஜி', 'கயானா'ஆகிய நாடுகளில் அரசியல்–சமூக–பொருளாதார ஆதரவு ஏதுமில்லாதுபோனதால் தமிழ்மொழி அழிவுற்றது. அங்குள்ள தமிழர்கள் காலப்போக்கில் அந்தந்தத் தேசத்து மொழிகளையே பயிலும் நிலை ஏற்பட்டது. முன்பு இக் கட்டுரைதொடக்கத்தில் பேசிய மொழிக்குறித்த கருத்துகள், உரையாடல்கள், மொழித்தொடர்புகள் காலப்போக்கில் நிலைத்தடுமாறுதலும்+சிதையுறுதலும்+அழிவுப்பாதையை நோக்கிய நிலையும்மொழிவரலாற்றில் இருக்கத்தான் செய்கிறது.

இவற்றுள் தமிழ்மொழியும் விதிவிலக்கல்ல. லெமூரியா கண்டத்தில் தோன்றியதாகக் கூறப்படும் தமிழும், அம் மொழிப்பேசும் தமிழர்களும் இருந்துள்ளதாகதமிழ்மொழி வரலாறும்ஆய்வுகளும் தெரிவிக்கின்றன. தமிழும் பல்வேறு காலகட்டத்தில் வளர்ச்சி+வீழ்ச்சியைச் சந்தித்து வந்திருக்கிறது. இந் நிலை ஏற்பட அதற்கான தேவையும் சிக்கலும் எதனால் ஏற்பட்டது?நாம் சிந்திக்க வேண்டும். சான்றாக:

- இயற்கைச் சீற்றத்தாலும் பொருளாதார நெருக்கடியாலும் அரசு–அரசியல் மாற்றத்தாலும் மொழியும்அம் மொழிப்பேசுபவர்கள் மடிதல் மற்றும்பிற இடமாற்றம் செய்தல்.
- வேலைநிமித்தம் காரணங்களுக்காக, கல்விக்காக, வெவ்வேறு நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து செல்லுதல்.
- மூத்த சான்றோர்கள், ஆவணங்கள், ஓலைச்சுவடிகள், நூல்கள், நூலகங்கள் முதலியவை மொழிக் குறித்த அடையாளங்களை அழித்தல்.
- வேற்றுமொழியின் கலப்பும், அம் மொழியின் பண்பாடு முதலான அனைத்தும் ஒரு மொழி எதிர்கொள்ள முடியாத நிலை.
- சாதிXசமய உட்பூசல்களும் உயர்வுXதாழ்வு நிலைகளும் மனிதனை அடிமைப்படுத்தி அவனது சுயவுரிமையைப் பறித்தல். இது எதிர்காலஇளம்தலைமுறையினருக்குமொழியின் மீதானகாழ்ப்புணர்ச்சிக்கு வழிவகுக்கும் நிலை.

மேற்குறித்த காரணங்கள் ஒரு மொழி அழிவுக்கான காரணங்களாகக் கொள்ளப்பட்டன. எனினும், தமிழ்மொழியும் இதுபோன்ற காரணங்களுக்குக் கடந்த கால கட்டத்தில் இடர, இடம் இருக்கக் கூடும். இதை நாம் மறந்துவிடக்கூடாது. 'ஆங்கிலம்', 'ஹிந்தி', 'சமஸ்கிருதம்', 'சிங்களம்', 'டச்சு', 'போர்ச்சுக்கீசியன்', 'உருது', 'துருக்கி', 'பாரசீகம்', 'அரபியம்', 'மலாய்' (மலேசியா),'எபிரேயம்' (ஹீப்ரு)''பிரெஞ்சு', 'கிரேக்கம்', 'சீனம்', 'மலையாளம்', 'தெலுங்கு', 'கன்னடம்', 'மராத்தி' முதலான பிறமொழித் தாக்குதல்களால் தமிழ்மொழி சிக்கித் தவித்துக்கொண்டிருக்கிறது. இருந்தாலும் பிற மொழித் தாக்குதல்களைச் சமாளித்து குணம் மாறாமல், நயம் குறையாமல், ஒளிமங்காமல் பேரொலி கொடுத்து, உயரிடம் தேடிய உத்தம மொழியாக நம் தமிழ்மொழி இன்றளவும் விளங்குகிறது.

VII

இன்று உலகெங்கிலும் அவரவர் தாய்மொழியில் படித்து முன்னிலை அடைந்தவர்கள்தான் ஏராளம். தாய்மொழியைத் தவிர்த்து, பிறமொழியில் நாட்டம் செலுத்திவர்கள் முன்னிலை அடைந்தார்கள் என்கிற செய்தி உலக வரலாற்றில் இல்லையென்றே கூறலாம். அந்த வகையில் தமிழ்மொழிவழியே படித்துப் பெரும் நிலைக்கு உயர்ந்த சான்றோர் பெருமக்கள் தமிழ்நாட்டிலும் இந்தியாவிலும் உலகரங்கிலும் செழித்தார்கள்; செழித்துக்கொண்டும் இருக்கிறார்கள். சான்றாக:

- நான் முழுக்க முழுக்கத் தமிழ்மொழி வழியிலேயே படித்து, அரசுப் பள்ளிகளிலேயே படித்து உயர்ந்த நிலைக்கு வந்திருக்கிறேன். அரசாங்க வேலைகளில் தமிழ்வழியில் படித்தவர்களுக்கு 20% ஒதுக்கீடு உண்டு. எனவே, உற்சாகமாகத் தாய்மொழியில் படிக்க வையுங்கள். ஆங்கிலத்தின்பின் ஓட வேண்டாம் என முன்னால் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைகழகத் துணைவேந்தர் முனைவர் ம. திருமலை அவர்கள் கூறியிருக்கிறார்.
- கணிதமேதை ராமானுஜமும் இந்திய விஞ்ஞானி, முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமும், உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி சதாசிவம் ஆகியோர், அரசுப் பள்ளியில் தமிழ்வழியில் படித்துப் புகழ் பெற்றவர்கள் ஆவர்.

தமிழ்மொழியால் தமிழர்கள் மேம்பட்டனர் என்று சொல்வதைவிட, தமிழர்களால் தமிழ்மொழி மேம்பாடு அடைந்துள்ளது; அடைந்தும் வருகிறது என்று கூறுவது ஏற்புடையது. இந்தியாவிலும் இலங்கையிலும் பத்தொன்பது பல்கலைக்கழகங்களில் 'தமிழ்ப் பீடங்கள்' உள்ளன. அத்துடன், உலகின் பல முக்கிய நாடுகளான 'அமெரிக்கா', 'இங்கிலாந்து', 'கனடா', 'ஆஸ்திரேலியா' போன்ற நாடுகளின் பல்கலைக்கழகங்களும் தமிழின் முதுமைக் கலாச்சாரத்தை ஆராய்கின்றன. தமிழ்ப்பேசும் மக்கள் இன்று உலகின் பல பகுதிகளிலும் (கிட்டத்தட்ட நாற்பதுக்கும் மேலான நாடுகளில்) வாழ்கிறார்கள் என்கிற தகவலைத் தமிழக வரலாறு கூறுகின்றது.தமிழ்மொழியின் தேவை தமிழர்களுக்கு மட்டுமன்று, உலகநாடுகளுக்கும் அதன் தேவை மிகுதியென்பதை மேற்சுட்டிய சான்றுகள் உறுதியளிக்கின்றன. 'தமிழ்மொழி கல்வி', 'மருத்துவம்', 'அறவியல்', 'அறிவியல்', 'கணினி' என ஏராளமானத்துறைகளில் மிளிர்வதை, இன்றையத் தேவையின் முக்கியத்துவத்தை, எழுத்துகளின் வாயிலாகவும், மொழிபெயர்ப்புகளின் வழியாகவும் நான் கண்டுணரலாம்.

மேற்குறித்து பலவாறு பேசிய கருத்துக்கள் தமிழ்மொழிக் குறித்தும், தமிழர்கள் குறித்தும், பண்டைய வரலாற்றிலிருந்தும், தற்போதைய நிலவரத்தில் தமிழ்மொழி மட்டுமல்லாது, தமிழர்கள் பற்றிய முக்கியத்துவத்தையும் ஒருவாறு அலசினோம். இருப்பினும், வருங்காலங்களில் தமிழர்கள் தங்கள் தாய்மொழியின் மீதான பற்றை எவ்வாறெல்லாம் வெளிப்படுத்தலாம் அல்லது எவ்வாறெல்லாம் தமிழ்மொழியின் மீதான அக்கறையை, கவனத்தை, முக்கியத்துவத்தை வெளிப்படுத்தலாம் என்பதைப் பற்றிய சில மதிப்பீடுகளின் கூடிய வழிமுறைகளை இங்குக் காண்போம்.

- உலகின் தாய்மொழிவழிக் கல்வியைப் பயின்று பொருளாதாரத்தில் வலிமை கொண்ட தேசங்களான 'பிரான்ஸ்', 'ஜெர்மன்', 'ஜப்பான்', 'இங்கிலாந்து', 'நார்வே' போன்ற நாடுகள் இருப்பதைப்போலவே, நாமும் தமிழ்மொழிவழிக் கல்வி பயிலலாம்.
- உலகின் பெரும்பாலான நாடுகளில் அவரவர் தாய் மொழியிலேயே 'மருத்துவம்', 'அறிவியல்', 'பூகோளம்', 'பொருளாதாரம்', 'இசை', 'கணினி' உள்ளிட்ட அனைத்துத் துறை பாடங்களும் பயிற்றுவிக்கப்படுகின்றன. இதுபோல், நாமும் தாய்மொழி வழியில் பிறமொழியிலிருக்கும் நூல்களையும், பள்ளி, கல்லூரி, பல்கலைக் கழகப் பாடங்களையும் தமிழில் பயில வழிவகை செய்யலாம்.
- தமிழக அரசியலில் தமிழுக்கான உரிமைக் குரலை ஒலிக்கச் செய்வது எவ்வாறு என்பதையும், தமிழைப் பொருளாதார லாபமுடைய மொழியாக மாற்றுவது எவ்வாறு என்பதையும் குறித்து நாம் சிந்தித்து ஒன்றிணைந்து செயல்படலாம்.
- பெற்றோர்கள் கலைகளுக்குக் கொடுக்கின்ற முக்கியத்துவம் மொழிக்குக் கொடுப்பதில்லை என்பது ஆசிரியர்களின் முக்கிய குற்றச்சாட்டாக இருக்கிறது.இது களைய மொழியுணர்வை ஏற்படுத்தும் 'தமிழர் மரபு' பற்றிய தகவல்களைச் சேகரித்து பெற்றோருக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் துண்டறிக்கைகள் வழங்கலாம்.
- பேச்சுத்தமிழின் பயன்பாட்டை மேம்படுத்தி இளையர்களிடம் 'தமிழ்மொழி', 'தமிழ் இலக்கியம்', 'தமிழர்ப் பண்பாடு' ஆகியவற்றின்மீது ஆர்வத்தையும் மதிப்பையும் வளர்க்கலாம்.
- மாணவர்களிடையே தமிழ்மொழி குறித்த வாசிப்பை ஏற்படுத்த அதற்குரிய பொருத்தமான வாசிப்புப் புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து கொடுத்து பயிற்சி பெற ஆசிரியர்கள் முன்வர வேண்டும்.
- தமிழ்த் தொடர்பான 'இலக்கிய நடவடிக்கைகள்','போட்டிகள்','முகாம்கள்' முதலியவற்றை ஏற்பாடு செய்ய வேண்டும். தமிழாசிரியர் அல்லாத பிற ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகளையும் பயிலரங்குகளையும் ஏற்பாடு செய்வதால்,

தமிழ் மீதான உயரிய மதிப்பைக் கூட்டலாம்.

- வாழ்வியலில், வழிபாட்டில், பயிற்சிமொழியில் தமிழுக்கு முக்கியத்துவம் கோரி 'வளர்தமிழ் இயக்கம்' கோவையில் தமிழ்ப் பயிற்று மொழி மாநாடு நடத்தியது. அதுபோல், பல மாநில-மாவட்டங்களிலும், தமிழ்மொழிக் குறித்த அமைப்புகளையும் அறக்கட்டளைகளையும் சங்கங்களையும் ஏற்படுத்தி,தமிழர்களுக்கு மட்டுமல்லாமல், பிற மொழியினருக்கும் தமிழ்மொழியின் சிறப்பம்சங்களை எடுத்துக் கூறி ஊக்கப்படுத்தலாம்.
- தமிழக அரசு மட்டுமல்ல; தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களும் மேற்கூறிய இத் தொடர்பைப் புதுப்பிக்க வேண்டும்; வளர்த்தெடுக்க வேண்டும். அதற்கான அத்தனை முயற்சிகளையும் விரைந்து மேற்கொள்ள வழிவகை செய்யலாம்.
- தமிழர்கள் வாழும் நாடுகளுக்கு தாய்த் தமிழகத்திலிருந்து 'மொழி அறிஞர்கள்', 'கலைஞர்கள்','இசைவாணர்கள்' போன்றவர்கள் அடங்கிய தூதுக் குழுக்கள் ஆண்டுதோறும் அனுப்பப்பட வேண்டும். இந்நாடுகளில் வாழும் தமிழர்களுக்கும் தமிழரல்லாவர்களுக்கும் தமிழ்மொழி மீதான அக்கறை செலுத்துவதற்கு, தமிழ் கலை-இலக்கிய விழாக்கள் நடத்தலாம்.இது பிறர் நாட்டினரும் காண 'இணையம்','திரைப்படங்கள்','தொலைக்காட்சி', 'வானொலி', 'பண்பலைகள்' ஆகிய ஊடக வாயிலாகவும் இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம்.
- மேற்கண்ட நாடுகளில் உள்ள இந்தியத் தூதரகங்களில் தமிழ்க் கலை, பண்பாடு போன்றவைகளுக்குத் தனிப்பிரிவுகள் அமைக்க வேண்டும். இத்துறைகள் மூலம் அந்தந்த நாடுகளில் கலை-பண்பாடு ஆகியவற்றைப் பரப்புவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- தமிழ்மொழியை இளம்தலைமுறையினருக்கு எடுத்துச்செல்ல, அவர்களது பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளுக்கு தமிழில் பெயர் வைக்கவேண்டும். வீட்டில் அனைவரும் தமிழில் பேசிப் பழக வேண்டும்.

VIII

நிறைவாக, உலகில் மொழி, இனம் ஆகிய அடிப்படையில் உருவாகியுள்ள நாடுகளைக் காணும் பொழுது – ஐரோப்பாவில் 'போலந்து', 'இத்தாலி', 'துருக்கி', 'கிரேக்கம்' போன்று வேறு பல ஐரோப்பிய நாடுகளுடன், ஆசியாவில் 'இந்தோனேசியா', 'வியாட்நாம்', 'கொரியா', 'தாய்லாந்து', 'மியன்மார்' (பர்மா), 'ஈரான்' ஆகிய நாடுகள் தமிழ்மொழிக்குப் பல படிகள் பின்னணியில் நிற்பதை நாம் காண்கிறோம்.

தமிழர்கள் மத்தியில் தாய்மொழியாகியத் தமிழ்மொழிப் பற்றிய முக்கியத்துவத்தை, மேற்கண்ட பல தகவல்கள்-சிந்தனைகள்–வரலாறுகள்–ஆய்வுகளின் அடிப்படையில் சீரானக் கண்ணோட்டத்துடன் கண்டோம். தமிழ்மொழியின் மீது தமிழர்கள் எவ்வாறெல்லாம் பற்று வைக்கலாம்; முக்கியப்படுத்தலாம் முதலான தகவல்கள், சிந்தனைகள் இக் கட்டுரையில் முன்வைக்கப்பட்டன. இருப்பினும், இன்றைக்குப் பல்வேறு ஊடகங்களால் மனிதன் ஆட்படுகிறான்.

வானொலி–பண்பலை–தொலைக்காட்சி–திரைப்படம்–தினப்பத்திரிகைகள்–இலக்கியப் பத்திரிகைகள்–மின்னனு சாதனங்கள்–கணினி முதலான இணையச்சேவைகளும், கைபேசி–தொலைபேசி–குறுந்தகவல்–மின்னஞ்சல்–சுட்டுரை–புலனம் முதலான ஊடகங்கள் மனிதனுக்கு அத்தியாவசியத் தேவைகளாக மாறிவிட்டன. இந் நிலையில், தற்போதைய இளம்தலைமுறைகள் தாய்மொழியைத் தவிர்த்து, பிற மொழிகளில் நாட்டம் செலுத்துகின்றனர். அதற்குக் காரணம், நமது சமூக–சமுதாயபொருளாதாரச் சூழலும் நெருக்கடியுமே முக்கியக் காரணங்களாகும். இதனால், தமிழ்மொழிக்குப் பங்கம் விளையுமா? என்றால், அது காலத்தின் கையில்தான் இருக்கிறது.

துணைநூற் பட்டியல்

நூல்கள்

அரங்கநாதன், மா. (தொ.ஆ.) (1985).*எண்பதுகளில் கலை, இலக்கியம் (கருத்தரங்கக் கட்டுரைகள்).* சென்னை: மூன்றில் வெளியீடு.

சோமலே. (1975). *தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும்.* சென்னை: பாரி நிலையம்.

நஜ்மா, மு. & கஸ்தூரி, மு மற்றும் பலர். (தொ.ஆ.) (2012). ஐரோப்பிய அமெரிக்கத் தமிழியல் அறிஞர்கள். சென்னை: பரிசல் வெளியீடு.

பிள்ளை, கே.கே. (2004).*தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும்*. சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

மதியழகன், ம. (1991).*நவீன இலக்கியச் சிந்தனைகள்*. மயிலாடுதுறை: ப்ரீத் வெளியீட்டகம்.

விமலானந்தம், மது.ச. (இ.ப.) (2017).*தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம்*. சென்னை: முல்லை நிலையம்.

இணையம்

https://www.pothunalam.com

http://www.tamilandam.com

https://alltamiltips.com

http://www.tamilvu.org/courses/degree/c011/c0114/html/c0114102.htm

https://tamil.examsdaily.in/tamilargalin-sirappugal-in-tamil

Funding

No funding was received for conducting this study.

Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.